ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2142/87 - 2019 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.09.27

*2142/87 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 04/ 2019*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை பொது மக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*ஆர். எச். எஸ். சமரதுங்க,*
*செயலாளர்,*
*நிதி அமைச்சு.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, செத்தெம்பர் 27.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்*

கட்டளை

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 2019 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை, இக்கட்டளை மூலம் தேவைப்படுத்துகிறேன்.*

மங்கள சமரவீர,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2019, செத்தெம்பர் 27.

**அட்டவணை**

| எச். எஸ். தலைப்பு (1) | எச். எஸ். குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **22.02** | | | **நீர், கனிப்பொருள் நீரும் காற்றூட்டப்பட்ட நீரும் உட்பட, சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மணமூட்டப்பட்டவை மற்றும் பிற மதுசாரப் பானங்களும் தலைப்பு 20.09 இன் கீழுள்ள பழச்சாறு அல்லது மரக்கறி சாற்றைக் கொண்டிராதவை** | | | |
| | | | | | | |
| | 2202.99 | -- | பிற : | | | |
| | | | | | | |
| | | --- | பழ அல்லது மரக்கறி சாறுகளைக் கொண்ட குடிபானங்கள் : | | | |
| | 2202.99.51 | ---- | 100 மி. லீற்றருக்கு 6 கிராமிற்கு அதிகமானளவு சீனி சேர்க்கப்பட்டவை | | 30% அல்லது ஒரு லீற்றர் ரூபா 40/- | லீற்றர் |
| | 2202.99.59 | ---- | பிற | | 30% அல்லது ஒரு லீற்றர் ரூபா 35/- | லீற்றர் |
| | | | | | | |
| | | --- | பிற : | | | |
| | 2202.99.91 | ---- | 100 மி. லீற்றருக்கு 6 கிராமிற்கு அதிகமானளவு சீனி சேர்க்கப்பட்டவை | | 30% அல்லது ஒரு லீற்றர் ரூபா 45/- | லீற்றர் |
| | 2202.99.99 | ---- | பிற | | 30% அல்லது ஒரு லீற்றா ரூபா 40/- | லீற்றர் |

10-534

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.